தலைப்பு 217 – நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 217 – நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள தாக்கங்களை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஏ.சி.ஏ – 6 (எஸ்ஏ 82) கூற்றின் பிரகாரம் நிதி அல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதியானது ரூபா 84.19 மில்லியனாக காணப்பட்டதுடன் நிதி நிலைமை கூற்றில் நிதி அல்லாத சொத்துக்களின் கடந்த ஆண்டின் இறுதி மீதியானது ரூபா 83.41 மில்லியனாக காணப்பட்டது. அதற்கமைய நிதி அல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதியில் ரூபா 0.78 மில்லியனான வேறுபாடு ஒன்று நிலவியது.	திரைசேறியினால் வெளியிடப்படும் எஸ்ஏ 82 அறிக்கையின் பிரகாரம் நிதி அல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதிகள் நிரலில் ஆரம்ப மீதிகள் சரியாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பது.	திணைக்களத்தின் புத்தகங்கள் மற்றும் திறைசேரியின் அறிக்கைகள் ஒப்பிடப்பட்டு தவறுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ii)	2024 திசெம்பர் 16 ஆம் திகதிய அரச நிதி வழிகாட்டியின் இலக்கம் 06/2024 இன் 8.1 பிரிவின் பிரகாரம் சிகாஸ் நிகழ்ச்சி திட்டத்தினுள் தயாரிக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் தொடர்பான மொடியுல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாததுடன், சமர்ப்பிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களின் பெறுமதி மற்றும் திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்கள் தொடர்பில் தயாரிக்கப்பட்டிருந்த செலவின அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களின் பெறுமதி ஆகியவற்றுக்கு இடையே ரூபா 7.87 மில்லியனான வேறுபாடுகள் நிலவின.	நிலையான சொத்துக்கள் உள்ளடக்கப்பட்ட மென் பிரதியொன்று மின் அஞ்சல் ஊடாக 2025 ஏப்ரல் 21 ஆம் திகதி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் நிதி கூற்றுகளில் பல வருடங்களாக காண்பிக்கப்பட்டுள்ளது அந்த பட்டியலுக்கு உரிய பெறுமதிகள் என்பது அவதானிக்கப்பட்டது. அந்த வேறுபாடு தொடர்பில் ஆராய்ந்து திருத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	சரியான பெறுமதி கணக்கு வைக்கப்பட வேண்டும். பொது கணக்குகள் வழிகாட்டியின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் தொடர்பான முடிவுகள் தயாரிக்கப்பட்டு நிலையான சொத்துக்கள் தொடர்பில் நாளதுவரையான தகவல்களை பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திணைக்களத்தினால் முறையான எதிர்வு கூறல் அல்லது எந்தவித நடைமுறைக்கு சாத்தியமான அடிப்படையை கொண்டிராத வகையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்த காரணத்தால், 12 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் 45 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்புகள் எஞ்சி	தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2024 இன் 2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச செலவினங்களை மட்டுப்படுத்துவதற்காக Zoom தொழில்நுட்பத்தின் ஊடாக கலந்துரையாடல்கள் மற்றும் கூட்டங்களை நடத்துதல், ஆணையாளரால் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு படிகளை பெற்றுக் கொள்ளுதல்,	நிதிப்பிரமாணம் 50(ii) என் பிரகாரம் மதிப்பீட்டினை ஏழு மாத அளவில் முழுமையானதாகவும் துல்லியமானதாகவும் தயாரித்து உள்ளதாக கணக்கிட்டு உத்தியோகத்தரால் பொறுப்புடன் செயல்பட வேண்டும்.

இருந்தன. அவ்வாறே 03 செலவின விடயங்களின் நிதி ஏற்பாடானது நிதிப்பிரமாணம் 66 மூலம் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்த போதிலும், 37 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையிலும் அந்த செலவின விடயங்களில் சேமிப்புகள் காணப்பட்டன. மேலும் 217-1-1-1403 ஆம் இலக்க செலவின விடயங்களின் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு ரூபா 1.2 மில்லியனாக காணப்பட்டதுடன், நிதிப்பிரமாணம் 66 இன் மூலம் ரூபா 1.5 மாற்றப்பட்டமையால் அந்த மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாட்டினை விஞ்சி மாற்றல்கள் இடம்பெற்றிருந்தன.	ஆணையாளரின் கடமைகளுக்கு ஈடுபடுத்தப்படும் வாகனங்களுக்கு கூட்டினைந்த படிகளை செலுத்துவதற்கு அவசியம் ஏற்படாமை, UNCRC தரவு கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல் தொடர்பில் சிக்கல்கள் நிலவுகின்றமை சேவை உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுதல் தாமதமடைந்தமை, மூலதன சொத்துக்களின் பழுது பார்த்தல் அவசியமற்றதாக காணப்பட்டமை, பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தப்பட்டிராமை மற்றும் பரத்த சிறுவர் பயிற்சி மதியுரை நிலையத்தின் பராமரிப்பு நடவடிக்கைகள் தாமதமடைந்தமை போன்ற காரணங்களால் நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. 2024 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மின்சார பட்டியலில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு போதுமானதாக இல்லாதிருந்தமையால் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டினை விஞ்சி மாற்றல்களை மேற்கொள்வதற்கு நேர்ந்துள்ளது என்பது.

3.2 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான	திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை உள்ளடக்கும் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்தல் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம்

கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டிய போதிலும், அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதாக கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படடிருக்கவில்லை.	கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவு மற்றும் 2019 ஜனவரி 12 ஆம் திகதிய முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கை இலக்கம் DMA/01-2019 இன் 08 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய அறிக்கைகளை தயாரிப்பதற்கு அவசியமான தகவல்கள் திணைக்களத்தினால் உள்ளகக் கணக்காய்விற்கு வழங்கப்பட்டுள்ளது என்பது.	நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.3 முற்பணம் விடுவித்தல் மற்றும் தீர்த்தல்

கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட பொது நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் 09 ஆம் பந்தியின் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் உப கட்டுநிதி வழங்கப்பட்ட பின்னர் உரிய பணி நிறைவு செய்யப்பட்டு, 10 நாட்களினுள் அந்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 03 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 0.71 மில்லியனான உப கட்டுநிதிகளை தீர்ப்பதற்கு 12 முதல் 15 நாட்கள் வரையில் எடுக்கப்பட்டிருந்தது.	முற்பணங்களை தீர்ப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்வதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. தொழிற்பாட்டு மீளாய்வு

4.1 திட்டமிடல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திணைக்களத்தின் புள்ளி விவரங்களின் பிரகாரம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பாடசாலையை விட்டு இடைநிறுத்தல், சிறுவர் எனும் தொகுதிக்கு உட்பட்டோரின் திருமணங்கள், கருத்தரித்தல்கள், சிறுவர்களுக்கு உடல் ரீதியாக மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகங்கள் மற்றும் உள ரீதியான துஷ்பிரயோகங்கள், சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள், சிறுவர்களை கைவிடுதல் (கவனிக்காது விடல்), குழந்தை தொழிலாளர்கள், சிறுவர்களுடன் தொடர்புடையதான இணையதளத்துடன் தொடர்புடைய சம்பவங்கள் மற்றும் சிறுவர்கள் போதை பொருளுக்கு அடிமையாதல் ஆகிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ள சிறுவர்களை இலக்கிடாத வகையில் திணைக்களத்தின் செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.	பாடசாலையை கைவிட்டுச் சென்றுள்ள மாணவர்களை பாடசாலைக்கு வரவழைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் திணைக்களத்தின் கல உத்தியோகத்தர்களான சிறுவர் உரிமைகள் மேம்படுத்தல் உத்தியோகத்தர் / உதவி உத்தியோகத்தர்களின் கடமை ஒப்படைப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அவர்கள் அந்த பணிப்பொறுப்பினை பொதுவான கடமை ஒன்றாக மேற்கொள்கின்றனர். பாடசாலையை கைவிட்டுச் சென்றுள்ள மாணவர்களை மீண்டும் பாடசாலைக்கு அனுப்புவதற்கு மற்றும் பாடசாலை பயணத்தில் ஏற்படும் தடங்கல் சந்தர்ப்பங்களை தடுக்கும் நோக்கில் கல்வி உதவிகள், கெப்பகரு தெகுரு உதவிகள், அவசர இடர் உதவிகள் ஆகியன வழங்கப்படுகின்றன. அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது.	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய பொது நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமைகளின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் நடவடிக்கை திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.2 பணிப்பொறுப்புகளை நிறைவேற்றாமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) தேசிய கொள்கைகள் மற்றும் தேசிய நியமங்களுக்கு இணங்க அனாதைகள், கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற குழந்தைகள், சட்ட ரீதியான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்த குழந்தைகளையும்	ஒவ்வொரு வருடத்திலும் பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாக கூடிய மாணவர்களை போன்று இடருக்குள்ளான சமூகத்தினரின்	சிறுவர் உரிமைகள் பிரகடனத்தின் பிரகாரம் பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் வீதி சிறுவர்கள்,

	விசேடமாக கருத்தில் கொண்டு அனைத்து குழந்தைகளினதும் உரிமைகளையும் உறுதிப்படுத்தும் வகையில் அவர்களுக்கு சமனான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைகளத்தின் செயல் பணியான போதிலும், பாரதூரமான அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள வீதியில் உள்ள சிறுவர்கள், கடற்கரையை அண்மித்த, தோட்டப்புற பின் தங்கிய சமூகத்தினரின் சிறுவர்களை இனம் கண்டு அவர்களின் தரவு கட்டமைப்பு ஒன்றினை பேணுவதற்கு அந்த சிறுவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு மற்றும் அந்தக் சிறுவர்களின் உரிமைகளை மீறப்படும் சந்தர்ப்பங்களை தடுப்பதற்காக எந்த ஒரு வேலைத்திட்டமும் இதுவரையிலும் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.	பிள்ளைகளுக்காக பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் இந்த திணைகளத்திற்கு அனுப்பப்படும் செயல்திட்டங்களிடையே பொருத்தமான செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய நிதிஏற்பாடு வழங்கப்படுகின்றது. இதுவரையிலும் அச்சுறுத்தலுக்குள்ளான சிறுவர்களை இனங்காணும் முன்னோடி செயற்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்துவதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதனைப் போன்றே தொழில்நுட்ப வசதிகள் இல்லாதிருந்தமையின் அடிப்படையில் பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் வீதியில் உள்ள சிறுவர்கள், கரையோரங்கள் மற்றும் தோட்டப்புறத்தினை சார்ந்த சமூகத்தினரின் பிள்ளைகள் தொடர்பில் தரவு கட்டமைப்பொன்றினை பராமரித்துச் செல்லுதல் சிக்கலுக்கு உரியதாக காணப்படுகின்றன.	கரையோரத்தை அண்மித்து சிறுவர்கள், மற்றும் தோட்டப்புறத்தினை அண்மித்த சமூகத்தினரின் சிறுவர்கள் உள்ளடங்களாக அனைத்து சிறுவர்களினதும் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு முறையான பொறிமுறை ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	கட்டளை சட்டம் உள்ளடங்களாக சட்டங்கள் மற்றும் விதிகள் காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப திருத்தி அமைத்தல் திணைக்களத்தின் பிரதான பணியென்றான போதிலும், 2024 இன் 39 ஆம் இலக்க சிறுவர் அதிகாரச் சட்டம் மற்றும் 1941 இன் 24 ஆம் இலக்க குழந்தை தத்தெடுப்பு கட்டளை சட்டம் ஆகியவை கால ரீதியான	நீதிமன்றங்கள் அமைச்சின் மூலம் 2024 ஜூன் 10 ஆம் திகதிய MOJ/L4/563/2023 ஆம் இலக்கமுடைய திருத்தப்பட்ட சட்ட வரைபிற்கு மாகாண ஆளுநரின் பரிந்துரையை வழங்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக	கட்டளை சட்டம் உள்ளடங்கலான சட்டங்கள் மற்றும் அதிகாரச் சட்டங்கள் காலத்தின் தேவைபாட்டுக்கு பொருந்தும் வகையில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட

தேவைப்பாடுகளுக்கு பொருந்தும் வகையில் திருத்தப்பட்டிருக்கவில்லை.	சிறுவர் சட்டம் மற்றும் சிறுவர்களை தத்தெடுப்பதற்கான கட்டளை சட்டம் ஆகியவற்றை திருத்துவதற்காக நீதிமன்றங்கள் அமைச்சின் மூலம் குழு ஒன்று நியமிக்கப்பட்டு இறுதி வரைவு கௌரவ நீதிமன்றங்கள் அமைச்சருக்கு கையளிப்பதற்கு குழு கட்டளை பிறப்பித்துள்ளது என்பது.	வேண்டும்.

4.3 உத்தேச பூர்த்தி மட்டத்தை அடையாமை

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 500 குடும்பங்களுக்காக இரட்டை குழந்தைகளுக்கான நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அதன் செயன் முன்னேற்றம் 280 குடும்பங்கள் அதாவது 56 சதவீதம் மாத்திரமாக காணப்பட்டது. அதன் மொத்த கிரயம் மதிப்பீடு ரூபா 1.875 மில்லியனாக காணப்பட்டதுடன், நிதி செயல் முன்னேற்றமானது ரூபா 1.375 மில்லியன் ஆகவும் காணப்பட்டமையால் நிதி முன்னேற்றமானது 73.3 சதவீதமாக காணப்பட்டது. அதற்கமைய பௌதீக செயல் முன்னேற்றம் குறைவடைந்து நிதி செயன்முன்னேற்றம் அதிகரித்திருந்தது.	செயல் நடவடிக்கை திட்டத்தினுள் இரட்டைக் குழந்தைகளுக்கான நிதி உதவி வழங்குவதற்கு 500 நலனாளிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது, அது தொடர்பில் பெற்றுள்ள கோரிக்கைகளின் எண்ணிக்கையை எடுகோளாகக் கொண்டே ஆகும். அதற்கமைய ஆண்டினுள் 372 இரட்டைக் குழந்தைகளுக்கான கோரிக்கைகள் மாத்திரமே கிடைத்திருந்தன. அதற்கமைய ஆண்டினுள் கிடைத்த அனைத்து விண்ணப்பங்களுக்கும் உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது.	வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை காலரீதியாகவும் செயற்திறனாகவும் நிறைவேற்றுவதை உத்தேசமாகக் கொண்ட பௌதீக மற்றும் நிதி இலக்குகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஆ)	இன்னல்களுக்கு உள்ளாகிய குழந்தைகளுக்கு அவசர விபத்து உதவிகளை வழங்குவதற்காக உத்தேசிக்கப்பட்ட செயத்திட்டத்தின் அடைவு மட்டமானது 200 சிறுவர்களாக காணப்பட்ட போதிலும் அதற்காக 85 சிறுவர்கள் மாத்திரம் இனம் காணப்பட்டிருந்தனர். அதற்கமைய பௌதீக செயல் முன்னேற்றம் 42.5 சதவீதமாக இருந்தது நிதி செயன்முன்னேற்றம் 54 சதவீதமாக காணப்பட்டமையால் பௌதீக செயல் முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	அவசர விபத்துக்களுக்கான கோரிக்கைகள் கிடைக்கக்கூடும் என உத்தேசிக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை 200 ஆகும். எனினும் அவ்வாறான கோரிக்கைகளில் 53 மாத்திரமே கிடைத்திருந்தது. அதற்குமே கிடைத்த கோரிக்கைகளுக்கு உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது.	- மேற்படி-

4.4 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்		
(i) தேசிய சிறுவர் பேரவையில் எதிர்வரும் ஆண்டுக்கான செயல் நடவடிக்கை திட்டத்தினை தயாரித்தல் இந்த நிகழ்ச்சி திட்டத்தின் பிரதான நோக்கமான போதிலும் கணக்காய்வு திகதி வரையிலும் அந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை	சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகள், மேலதிக வகுப்புகள், பரீட்சைகளுக்கு தயாராதல் போன்ற காரணங்களின் அடிப்படையில் அதனை திருத்துவதற்கு அதிக காலம் தேவைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.	தேசிய சிறுவர் பேரவையின் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தினை கால ரீதியில் தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ii) 60 சிறுவர்களுக்காக மேற்படி நிகழ்ச்சி திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 41 சிறுவர்கள் மாத்திரம் பங்குபற்றி இருந்ததுடன் சிறுவர்களை தெரிவு செய்யும் நடைமுறையானது வெளிப்படைத்தன்மை அற்றதாக காணப்பட்டது. இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடும் போது நிகழ்ச்சி திட்டத்தின் உத்தேச	நிகழ்ச்சி திட்டத்தில் பங்குபற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 60 சிறுவர்களும் தமது பங்கு பற்றலை உறுதி செய்திருந்த போதிலும் அப்போது நிலவிய அதிக மழை காரணமாக வருகையை பதிவு செய்த சிறுவர்களின் ஒரு சிலர் அதற்கு பங்குபற்றுவதற்கு முடியாது என அறிவித்திருந்தனர். அதற்கமைய நிகழ்ச்சி	நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சி திட்டங்களுக்கு எதிர்பார்த்த பங்களிப்பு நிலவுவதை உறுதிப்படுத்துவதற்கு மற்றும் உத்தேச நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பில் செயலாற்றல் குறிகாட்டிகளை அறிமுகப்படுத்துவதன்

பங்களிப்பினை பூர்த்தி செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன், உத்தேச நோக்கம் அடையப்பட்டுள்ளதா என்பதை அளவீடு செய்வதற்கு செயலாற்றல் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை	திட்டங்களை திட்டமிட்டவாறு பங்கு பற்றிய சிறுவர்களுடன் நடாத்துவதற்கு நேரிட்டது.	மூலம் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ) யுனிசெப் நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டம்		
(i) மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்தல் அமைச்சின் ஊடாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்திற்கு குறுங்கால நிதி உதவி வழங்கும் செயல்திட்டமொன்றாக யூனிசெப் நிறுவனத்தினால் 2024 ஆம் ஆண்டுக்காக ரூபா 27.7 மில்லியன் தொகையான நிதி ஏற்பாடு கிடைத்திருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் எந்த ஒரு செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை .	2024 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதியினை செலவிடுவதற்கு முன்னர் 2023 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி திட்டங்களை நடைமுறைப்படுத்திய பின்னர் எஞ்சிய பணம் செலவிடப்பட உள்ளது. அதற்கமைய 2023 ஆம் ஆண்டில் எஞ்சியிருந்த ரூபா 14.349 மில்லியன் தொகைக்கு நிகழ்ச்சி திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அமைச்சின் செயலாளர் அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத்தப்பட்டது. 2024 ஆம் ஆண்டின் இறுதிக்காலப் பகுதியில் பொதுத்தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தல் நடாத்தப்பட்டமையின் மூலம் 2024 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 27.7 மில்லியனை செலவிடுவதற்கு போதிய காலம் கிடைத்திராமையில் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்ற முடியாதிருந்தது.	வெளிநாட்டு உதவிகளின் மூலம் கிடைக்கப்பெறும் நிதியேற்பாடுகளை ஆக்கப்பூர்வமாக சிறுவர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii) யுனிசெப் நிறுவனத்தினால் 2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உதவிகளிலிருந்து ரூபா 14.35 மில்லியன் எஞ்சியுள்ளதுடன் அந்த தொகைக்கு அதன் 2024 ஆம் ஆண்டுக்கான செயல் நடவடிக்கை திட்டம்	2023 ஆம் ஆண்டில் எஞ்சியிருந்த பணத்தில் 2024 ஆம் ஆண்டுக்காக பல்வேறு நிகழ்ச்சி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் இந்த நிகழ்ச்சி திட்டங்களுக்கு திட்டமிடப்பட்ட செலவினங்கள் அந்த விதத்திலேயே சில	- மேற்படி-

	தயாரிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக ரூபா 12.1 மில்லியன் செலவினமாக அறிக்கையிடப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபா 2.23 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	நிகழ்ச்சி திட்டங்களுக்கு மேற்கொள்ள நேரிடாமையின் அடிப்படையில் பணம் சேமிக்கப்பட்டிருந்தது என்பது.	
(iii)	யுனிசெப் நிதியம் சிறுவர் உரிமைகளை பாதுகாத்தல், அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்தல், அவர்களின் ஆற்றல்களை அடைந்து கொள்வதற்கு சந்தர்ப்பங்களை விரிவுபடுத்துதல், காலநிலை மாற்றங்களின் காரணமாக இடர்கள் மற்றும் சுற்றாடல், முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி, கல்வி, பால்நிலை சமத்துவம் ஆகிய விரிந்த பரப்பிலான சிறுவர்களின் தேவைகள் மற்றும் உரிமைகளுக்காக நிறுவப்பட்டிருந்த போதிலும், 2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாடுகளில் பயன்படுத்தப்படாத ரூபா 14.35 மில்லியன் தொகையான நிதிய அளிப்புகள் 05 செயல்பாடுகளுக்காக திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 11.4 மில்லியன் அதாவது 80 சதவீதம் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.	2023 ஆம் ஆண்டில் யுனிசெப் உதவிகளாக வழங்கப்பட்ட தொகையிலிருந்து 2024 ஆம் ஆண்டுக்கான எஞ்சிய தொகை ரூபா 14.349 மில்லியன் ஆகும். இந்தப் பணத்தில் 07 நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் அதற்காக ரூபா 12,541,268 செலவிடப்பட்டது. அந்த நிகழ்ச்சிதிட்டங்களின் உத்தியோகத்தர்களுக்காக 03 நிகழ்ச்சி திட்டங்களும் சிறுவர்களுக்காக ஒரு நிகழ்ச்சி திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டது என்பது.	சிறுவர்களுக்கான செயல்திட்டத்தின் உத்தேச நோக்கங்கள் நிறைவேற்றப்படும் விதத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை மற்றும் நிதியேற்பாட்டின் கூடுதல் சதவீதத்தினை சிறுவர்களுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(இ) ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்க்கைத்தர அபிவிருத்தித்திக்கான அவசர உதவியளிப்பு செயற்திட்டம்

(i) மேற்படி செயற்திட்டத்தின் கீழ் கிடைத்த 100 மேசை கணினிகள் மற்றும் 100 லேசர் அச்சீட்டு இயந்திரங்கள் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு வழங்குவதற்காக மாகாண நன்னடத்தை திணைக்களத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன், சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு அந்த உபகரணங்களை பகிர்ந்தளித்துள்ளதாக வழங்கப்பட்ட கட்டளைகள் மற்றும் பெறுவனவு கட்டளைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்த உபகரணங்களின் பாதுகாப்பு, மத்திய நிலையங்களின் பொருட்பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டமைக்கான உறுதிப்படுத்தும் சான்றுகள் காணப்படவில்லை.	சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு அந்த உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், உரிய பதிவேடுகள் தற்போது திணைக்களத்திற்கு கிடைத்துள்ளது என்பது.	நிதிப்பிரமாணம் 752 இன் பிரகாரம் பெறுவனவுகள் மற்றும் வழங்கள் கட்டளைகளை பெற்றுக்கொண்டு பொருட்பதிவேட்டு புத்தகங்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii) தற்போது மூடப்பட்டுள்ள பரத்த பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களுக்கு 03 கணினி இயந்திரங்கள் மற்றும் லேசர் அச்சீட்டு இயந்திரங்கள் எனும் படியாக வழங்கப்பட்டிருந்தமையால், குறித்த உபகரணங்களின் உத்தரவாத காலத்தினுள் எந்த ஒரு செயல்பாட்டுக்கும் ஈடுபடுத்தப்படாது விளைவற்று காணப்பட்டன.	பரத்த பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தினை எதிர்காலத்தில் ஆரம்பிக்கும் நோக்கில் குறித்த கணினி மற்றும் அச்சிட்டு இயந்திரம் அந்த நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், கட்டிடங்களை புதுப்பிக்காது சிறுவர்களை இணைத்துக் கொண்டு பயிற்றுவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான சூழ்நிலை ஒன்று காணப்படாத காரணத்தால் அந்த நிறுவனத்தினை செயல்படு நிலைமைக்கு உள்ளாக்கும் வரையிலும் குறித்த கணினி மற்றும் அச்சிட்டு	அனைத்து சொத்துக்களும் ஆக்கபூர்வமான வகையில் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுவதாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(இ) பிரிவின் பிரகாரம் மீளாய்வு செய்யப்பட்டு உரிய எழுத்து மூல அறிவுரைகளை வழங்குவதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்க

		இயந்திரங்களை திணைக்களத்திற்கு மீள பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	வேண்டும்.
(ஈ)	சிறுவர் பாதுகாப்பு திட்டங்களுக்காக நிதி உதவி வழங்குவதற்கு 300 சிறுவர்களை இலக்காகக் கொண்டு ரூபா 29 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 1.4 மில்லியன் தொகை 15 பாதுகாப்புத் திட்டங்களுக்கு செலவிடப்பட்டிருந்தது. நிதி செயன்முன்னேற்றம் மற்றும் பௌதீக முன்னேற்றம் ஆகியவை 5 சதவீதம் எனும் மிகவும் குறைந்த மட்டத்தில் நிலவின.	ADB செயற்திட்டத்தின் கீழ் சிறுவர்களுக்கான சிறுவர் பாதுகாப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது சமுர்த்தி வங்கியின் ஊடாக அந்த பணத்தை கணக்கு வைக்கும் நடைமுறை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதால் அந்த செயற்பாட்டில் நிலவும் சிக்கலான தன்மை மற்றும் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையின் அடிப்படையில் ஒருசில தாமதங்கள் ஏற்பட்டுள்ளன என்பது.	உத்தேச வரவு செலவுத் திட்ட இலக்குகளை கால ரீதியில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	துஷ்பிரயோகங்களுக்கு முகம் கொடுத்த மற்றும் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்த பெண் பிள்ளைகளுக்கு ஆலோசனை வழங்குதல், வாழ்வியல் திறன்களை மேம்படுத்துதல், தொழில்சார் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் அவர்களை சமூகமயப்படுத்துவதற்கு இலங்கையில் நிலவும் நிறுவனமான பரத்த சிறுவர் பயிற்சி மற்றும் மதியுரை சேவை தேசிய நிலையம் மற்றும் தேசிய பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஆகிய இரு நிலையங்கள் 2021 மே 12 ஆம் திகதி கொவிட் சிகிச்சை நிலையங்களாக பயன்படுத்துவதற்கு	2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட கலந்துரையாடலுக்கு அந்த நிலையத்தினை புதுப்பிப்பதற்காக ரூபா 28 மில்லியன் பணம் கோரப்பட்டுள்ளது. அவ்வாறான போதிலும் அதற்கான நிதியேற்பாடு இல்லாதிருந்த காரணத்தால் குறித்த நவீனமயப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிலையத்தினை பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய நிலைக்கு உள்ளாக்குதல் சிரமமானதாக காணப்பட்டது.	அனைத்து சொத்துக்களும் ஆக்கப் பூர்வமான வகையில் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுவதாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(இ) பிரிவின் பிரகாரம் மீளாய்வு செய்யப்பட்டு உரிய எழுத்து மூல அறிவுரைகளை வழங்குவதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், 2023 ஜூன் 06 ஆம் திகதி இந்த இரு நிலையங்களும் முறையாக திணைக்களத்திற்கு கையேற்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிலையங்களின் பௌதீக வளங்கள் மற்றும் அதன் சூழலை பழைய நிலைமைக்கு மாற்றி பயிற்சி மற்றும் மதியுரை சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	திணைக்களத்திற்குச் சொந்தமான தேசிய பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மத்திய நிலையத்தில் சுமார் 60 உத்தியோகத்தர்களுக்கு பயிற்றுவிக்கக்கூடிய வளிச்சீராக்கப்பட்ட அனைத்து வசதிகளையும் கொண்டமைந்த இரண்டு விரிவுரை மண்டபங்கள் காணப்பட்ட போதிலும் அந்த வளங்கள் விளைவற்று காணப்பட்டன.	2025 வரவு செலவு திட்ட கலந்துரையாடலுக்கு அந்த நிலையத்தினை புதுப்பிப்பதற்காக ரூபா 28 மில்லியன் அளவான தொகை கோரப்பட்டுள்ள போதிலும் அதற்கான நிதியேற்பாடு இல்லாதிருந்த காரணத்தால் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிலையத்தினை பயன்படுத்துவதற்கு பொருத்தமான நிலைக்கு உள்ளாக்குவதற்கு தவறியிருந்தது. எதிர்காலத்தில் இது தொடர்பில் செயல்திட்ட அறிக்கையொன்றினை தயாரித்து வெளிவாரி மூலங்களின் மூலம் புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்கான நிதி ஏற்பாட்டினை பெற்றுக்கொண்டு நவீனமயப்படுத்தி நிலையத்தினை உரிய பணிகளுக்கு பயன்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளமை.	பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு நிலையத்தினை பயிற்சி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	மதியுரைக் கட்டணங்களும் உள்ளடங்களாக ரூபா 2.3 மில்லியன் கிரயம் மேற்கொண்டு ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் தொடர்பிலான கொள்கை பிரகடனத்தை நடைமுறைப்படுத்தும் போது கால ரீதியான மற்றும் சரியான தரவுகளை சமர்ப்பிக்கும் தேவைப்பாட்டுக்காக 2018 ஆம்	5 ஒரு வருடங்களுக்கு ஒரு தடவை ஐக்கிய நாடுகளின் அமைப்பினால் சிறுவர் பாதுகாப்பு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கை தயாரிக்கும் பணியானது சிறுவர்களுக்காக செய்யப்படும் நேரடியான மற்றும் மறைமுகமாக செயல்படும் அமைச்சின்	கால ரீதியானதும் சரியானதுமான தரவுகளை சேகரிப்பதற்கான தரவு கட்டமைப்பினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஆண்டில் திணைக்களத்திற்கு சாட்டப்பட்ட ருசேஊ தரவு கட்டமைப்பிற்கு 06 வருடங்கள் கடந்து இருந்த போதிலும் உரிய தேவைக்கு ஈடுபடுத்த மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் சிலவற்றின் பங்களிப்புடன் தரவுகளை சேகரிக்கும் நடைமுறை ஒன்றாக UNCRC தரவு கட்டமைப்பானது 2018 ஆம் ஆண்டின் போது திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள போதிலும் தொழில்நுட்ப சிக்கல்கள் காரணமாக பயன்பாட்டிற்கு எடுக்க முடியாததாக இருந்தது இந்த கட்டமைப்பு புதுப்பிக்கப்பட்டு மிகவும் பாதுகாப்பாக மற்றும் செயல்திறனாக முன் கொண்டு செல்வதற்கு உரிய தொழில்நுட்ப உதவினை டிஜிட்டல் பொருளாதார அமைச்சிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்பது.	

4.6 முகாமைத்துவ நலிவுகள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) 1992 இன் 15 ஆம் இலக்க குழந்தைகள் தத்தெடுப்பு (திருத்தப்பட்ட) அதிகாரச் சட்டத்தின் 10 (ஈ) பிரிவின் அ,ஆ,இ ஆம் பந்திகளின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தத்தெடுக்கும் போது வழங்கப்பட்ட குழந்தைகள் தொடர்பில் 10 வருடங்கள் வரையிலும் பின் தொடர்தல் அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், அந்தப் பின் தொடர் அறிக்கைகள் உரியவாறு தொடர்ச்சியாக பெற்றுக் கொள்ளாத காரணத்தால் அந்த சிறுவர்கள் பாதுகாப்பற்றிருந்தனர்.	குடும்பத்தில் உறவினர்களின் பிள்ளைகளை தத்தெடுத்து பெற்றோரால் செயன்முன்னேற்ற அறிக்கைகளை அனுப்பும்போது உரிய முறையில் முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பங்கள் உள்ளன. எதிர்காலத்தில் இவ்வாறான முன்னேற்ற அறிக்கைகளை உரிய முறையில் பெற்றுக்கொள்ள புதிய வேலை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது என்பது.	கட்டளை சட்டத்திற்கு இணங்க பின் தொடர்தல் அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதுடன் வெளிநாட்டுக்கு தத்தெடுத்தல் அடிப்படையில் வழங்கப்படும் சிறுவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு பின் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ஆ) இலங்கை 1994 ஆம் ஆண்டில் நாடுகளுக்கிடையே குழந்தைகளை தத்தெடுத்தல் தொடர்பிலான ஒத்துழைப்பு மற்றும் அந்த சிறுவர்களை பாதுகாத்தல் தொடர்பான கொள்கை பிரகடனம் (ஹேக் சமவாயம்) அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் இலங்கையின் அதிகாரமானது நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்திற்கு சாட்டப்பட்டுள்ளது. அந்த சமவாயத்தின் 18 பிரிவின் பிரகாரம் சிறுவர்களை தத்தெடுப்பதற்கு இரு நாடுகளிலும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் 17 வது பிரிவின் பிரகாரம் சிறுவர்களை வழங்கிய நாட்டின் மத்திய அதிகார சபையினால் சிறுவர்களை தத்தெடுத்த நாட்டின் சட்டத்திற்கு இணங்க இந்த பணிக்காக இணங்குவதாக சான்றிதழ் ஒன்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அந்தப் பணி உரிய முறையில் இடம்பெற்றிருக்கவில்லை.	ஹேக் சமவாயத்திற்கு கையெழுத்திட்டுள்ள அனைத்து அரசுகளிடமிருந்தும் 18 ஆம் பிரிவின் கீழ் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது.	ஹேக் சமவாயத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய இணக்கப்பாட்டு சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

5. மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவியானது 2014 ஆகஸ்ட் மாதம் முதல் 10 வருட காலமாகவும், நன்னடத்தை உத்தியோகத்தர் பதவி 2017 ஆம் ஆண்டு முதல் 07 வருட காலமாகவும் வெற்றிடமாக காணப்பட்டன.	திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்புக்கு உரியதான வர்த்தமானி அறிவித்தலுக்கு அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ள போதிலும் அறிவித்தலில் சில குறைபாடுகள் நிலவியமையின் அடிப்படையில் அதனை திருத்துவதற்காக மீண்டும் அந்த அறிவித்தல் அரச சேவைகள் ஆணைகுழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பது.	திணைக்களத்தின் பிரதான நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு அத்தியாவசியமான பதவி வெற்றிடங்களை துரிதமாக நிரப்புவதற்கு அல்லது தேவைக்கேற்ற முறையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.